அனுமதி சாதகமான முறையிலே செய்ய பல சூழ்நிலைகள் ஏற்பட்டுவருகின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, உடனடியாக விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விசாரணை சரியான முறையில் நடைபெற வேண்டுமென்பதற்க்காக சில அதிகாரிகள் மாற்றப்பட்டிருப்பது உண்மைதான். இதனால் விரைவில் விசாரணை முடிவடையும் என்று நம்புகிறோம். விசாரணையை சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று நாம் அவர்களை நிற்பந்திப்பதற்கு இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசாரணையை அங்கே பணிபுரியக் கூடிய ஊழியர்களிடத்தில் மட்டிலுமே செய்யப்படுகிறதா ? இது சம்பந்தமாக பொதுமக்களிடத்திலேயும் விசாரணை நடத்தும் ஏற்பாடு அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விசாரணை விவரங்களை வெளியிடுவதற்கில்லையென்று நான் முதலிலேயே சொன்னேன்.

திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் தண்ணீர் தட்டுப்பாடு.

*264 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் கோடைக்காலங்களில் குடி தண்ணீர் பற்றாக் குறையை சமாளிக்க அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்று கட்டப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டது ; கிணறு ஆழப்படுத்தப் பட்டது ; புதிய மேல் நிலை நீர்த்தொட்டியிலிருந்து பல கட்டிடப் பகுதிகளுக்குக் குழாய்கள் போடப்பட்டு நீர் எடுத்துச் சென்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவை காரணமாக 1967 இடைப்பகுதி முதல் திருச்சிராப்பள்ளி மத்தியச் சிறைச்சாலையில் குடிதண்ணீர் வசதி கணிசமான அளவு சீர்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மத்திய சிறையில் 1967-க்கு முன்னால், கைதிகள் எல்லாம் வாரத்திற்கு ஒரு முறை குளிக்கக்கூடிய நிலைமையில் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வந்தது. தற்போதுள்ள புதிய சர்க்கார் அந்த நிலைமையை மாற்றியமைத்திருக்கிறதா ? மேலும், குடிதண்ணீர் திருச்சி நகராட்சியிலிருந்து வேன்களின் மூலம் கொண்டுவரப்பட்டது. தற்போது அந்த நிலைமையை புதிய சர்க்கார் மாற்றியமைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மேல்நிலை நீர்த்தொட்டி அமைக்கப்பட்ட பிறகு, குடிதண்ணீர் நிலைமை சீராகியிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் குடிதண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால், திருச்சிராப்பள்ளி நகராட்சியிலிருந்து வேன் ஒன்றுக்கு எட்டு ரூபாய் வீதம் செலவு செய்து தண்ணீர் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பணத்தைக் கொண்டாவது அங்குள்ள கிணற்றை ஆழப்படுத்தி, குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலே இருக்கின்ற கைதிகளுக்குச் சோறு, தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் அவர்கள் திருடியும் சாப்பிட முடியாத நிலைமை இருந்து

வருகிறது. காவேரிக் கரைமீது இருக்கும் மத்திய சிறையில் வருஷா வருஷம் தண்ணீர் கிடைக்காமல் நிலைமை மோசமாகயிருக்கிறதே, அங்கே உடனடியாக தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும், இல்லா விட்டால் அந்தச் சிறையை தண்ணீர் வசதியுள்ள வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மேல்நிலை நீர்த்தொட்டி கட்டப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டதும், தண்ணீர்த் தட்டுப்பாடு போய்விட்டது என்று நான் முதலிலேயே சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 265, அறநிலைய அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

State Civil List.

*246 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR }
THIRU N. S. V. CHITHAN } Will
the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government has permanently suspended the publication of the State Civil List and the reasons therefor; and

(*b*) when was the last list published ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை. நாட்டின் நெருக்கடி நிலையை முன்னிட்டும் அதனால் எழுதுபொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியதைத் கருத்திற்கொண்டும் நெருக்கடி காலத்தில் தமிழ் நாட்டு அதிகாரிகள் பட்டியல் வெளியிடுவதை அரசாங்கம் தாற் காலிகமாக நிறுத்தியது.

(இ) கடைசியாக, 1962, ஜனவரி 1-ந் தேதி முடிய உள்ள கால அளவுக்குப் பட்டியல் வெளியிடப்பட்டது.

திரு க. கோமதிசங்கர தீட்சதர் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அதிகாரிகள் புதிது புதிதாக மாறிவருகிறார்கள். தமிழ்நாட்டு அதிகாரிகள் பட்டியல் இதுவரை வெளியிட்டதாகத் தெரியவில்லை. இதன் காரணமாக அவர்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு இல்லா மல் போய்விடுகிறது. ஆகவே, மாநில அதிகாரிகள் பட்டியலை தயாரித்து வழங்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு கருணாநிதி : தலைவர் அவர்களே, தேசத்தின் நெருக்கடிநிலை காரணமாகவும், சிக்கனத்தைக் கைக்கொள்ள வேண்டி யதன் காரணமாகவும் 1962-ல் தமிழ்நாட்டு அதிகாரிகள் பட்டியலை தயாரிக்க வேண்டியதில்லையென்ற முடிவு எடுக்கப்பட்டது. பின்பு 1965-ல் அந்தப் பட்டியலை வெளியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டு, சில இடையூறுகளின் காரணமாக 1967 வரையில் தாமதங்கள் ஏற் பட்டன. இப்பொழுது அது அச்சடிக்கப்படும் நிலையில் இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1962-ல் தேசத் திலே நெருக்கடி நிலை இருந்தது வாஸ்தவம்தான். அந்தக் காரணத்தை யொட்டி அப்பொழுது பிரசுரம் செய்யவில்லை. இப்பொழுது நெருக்கடி நிலை இல்லை. நெருக்கடி நிலை எடுக்கப்பட்டுவிட்டது. ஒரு சிவில் லிஸ்ட் தயாரிப்பதால் அதிகாரிகளுக்கே தங்கள் நிலைமைகளைப் புரிந்துகொள்ள வசதியாக இருக்கும். இதனால் ஒன்றும் சிக்கனத்தை ஏற்படுத்திவிட முடியாது. அதிகாரிகளின் நன்மைகளை உத்தேசித்தும், அரசாங்கத்தினு டைய நிலைமையை தெளிவாக்குவதற்கும் இந்தப் பட்டியலை பிரசுரம் செய்வதற்கு இன்றைய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சிக்கனம் ஏற்படும் என்று கருதியது அன்றைய அரசு : மாநில அதிகாரிகள் பட்டியல் வெளிவரும் என்று கூறுவது இன்றைய அரசு.